District Munsif Court, Palani.
I.A.No.17/25 in O.S.88/2019

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை : செல்வி. S.அபூர்வா, B.A., L.L.B.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**
**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள், புதன்கிழமை**

**இ.ம.எண்.17/2025**
**இன்**
**அ.வ.எண்.88/2019**

1.கருப்புச்சாமி
2.சண்முகசுந்தரம் -- மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

// எதிர் //

1.A.முகம்மது யூசுப்
2.A.சேட்டு முபாரக் --- எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.M.ஹரிஹரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.அன்வர்தீன் அவர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 02.04.2025 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 ரூல் 1A(3)-ன் மற்றும் 151 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம் :-** பிராது மாதிரி வரைபடத்தில் நீலவர்ணமிட்ட சர்வே எண்.829/10 மற்றும் A, B, C, F, G பகுதி எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பொதுப்பாதை பகுதி

என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை கோரியும் மற்றும் பிற பரிகாரங்கள் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்களால் எதிர்வழக்குரைத் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது என்றும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர் தரப்பு சங்கதிகளுக்கு வேண்டி முக்கிய ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்க இயலாமல் போனால் மனுதாரர் தரப்பை நிரூபிப்பதற்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக நேரிடும் என்றும், எனவே, இம்மனு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட கால தாமதத்தை மன்னிக்க வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>**

1) மனுதாரர்கள் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் விசாரணையில் தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் பொய்யானது என்றும், மனுதாரரின் மனு அபிடவிட்டில் கண்டுள்ளது போல் வரைபடத்தில் நீலவர்ணமிட்ட சர்வே எண்.829/10 மற்றும் A, B, C, F, G பகுதி எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றும், விசாரணையில் கிராம நிர்வாக அலுவலர், வாதிகள், வாதிகளின் சாட்சியங்கள் அனைத்தும் முடிக்கப்பட்ட நிலையில் மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும், மேற்படி மனுவில் தாக்கல் செய்திருக்கும் 1, 2 ஆவணங்களின் சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லாத சொத்துக்கள் ஆகும் என்றும், ஆவண எண்.1888/1946 ஆவணமானது மனுதாரருக்கு சொந்தமானது அல்ல என்றும், ஆவணம் 3 ஆனது சர்வே எண்.829/11 கருப்பன்செட்டியார் மகன் வீரப்பசெட்டியாரின் இறப்பு சான்றிதழோ, வாரிசு சான்றிதழோ இந்த மனுவுடன் இணைக்கப்படவில்லை என்றும், மேற்படி வீரப்ப செட்டியாரின் வாரிசுகள்

ஒருவரோ, அல்லது பலரையோ, வாரிசுகள் என்று மனு தாக்கல் செய்யவும் இல்லை என்றும், ஆவணம் எண்.4 ன்படி சர்வே எண்.829/10 ல் 0.01.77 ஏர்ஸ் –ல் 0.00.15 ஏர்ஸ் உள்ள வீதியின் நடு மையத்தில் எதிர்மனுதாரர்கள்/ வாதிகளின் வீட்டிற்கு நேர் தென்புறம் உள்ள வீதியில் திரு.வீரப்பசெட்டியார் வீட்டிற்கு புல எண்.829/11 வீட்டிற்கும், கூறையடி பாத்தியம் விடாத நிலையில் திரு.ஆறுமுகம் மகன் கருப்பணன் என்பவருக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆவண எண்.5 ன்படி பாலசமுத்திரம் பேரூராட்சி சொத்து வரி ரசீதுகளில் காமாட்சியம்மன் கோவில் தெரு என்று உள்ளது என்றும், மேற்படி தெருவானது பாலசமுத்திரத்தில் 5 வது வார்டில் உள்ளது என்றும் கூறியுள்ளார்.

2) மேலும் ஆவண எண்.6 ன்படி வாணிக செட்டியார் சமூகம் ஆடிப்பெருவிழா, அழைப்பிதழ் 03.08.2017 ஆம் தேதி காலை 11.00 மணி அளவில் அபிசேக ஆராதனை நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் அது எந்த இடம் என்று குறிப்பிடவில்லை என்றும், பழனி வட்டாட்சியர் அவர்களின் ந.க.எண்.1930/2017/சி.2 ன்படி புலஎண்.829/10 ல் திரு.கருப்புச்சாமி என்பவர் வீதியில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார் என்றும், அதனை அகற்றுவதற்கு மனுதாரர்/2 ம்பிரதிவாதி திரு.சண்முகம்சுந்தரம் என்பவர் மனு கொடுத்ததின் பேரில் நடவடிக்கை உள்ளது என்றும், ஆவணம் 7 ன்படி வட்டாட்சியர் பழனி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சர்வே எண்.829/11 ல் முன்பாக பெரியப்பா மருமகன் வீடுகட்டி காலிசெய்ய மறுத்து வருகிறார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2 ம் மனுதாரர் மீது எந்தவித நடவடிக்கையும் செய்யவில்லை என்றும், சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் W.P.(M.D) No.835/2017 ல் in W.(M.P) No.7535/2017 உத்தரவின்படி 2 ம் மனுதாரரான சண்முகசுந்தரத்திற்கு தனிப்பட்ட வாய்ப்புகள் வழங்கி 8 வார காலத்திற்குள் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்ததில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல்

விட்டு வைத்துள்ளார்கள் என்றும், எனவே மேற்படி ஆவணங்களில் உண்மை தன்மை எதுவும் கிடையாது என்றும், மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு பொருந்தாத ஆவணங்கள் ஆகும் என்றும், எனவே மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பு குறியீடு செய்ய அருகதையற்றது என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

4. இம்மனுவில் தீர்மாளிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா என்பது ஆகும்."

5.**தீர்வு** :

5.1. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர் தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு வேண்டிய முக்கிய ஆவணங்கள் என்பதால் மனு ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து இம்மனு அனுமதிக்குமாறு வாதிட்டார்.

5.2. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், வாதி தரப்பில் சாட்சியங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டது என்றும், மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள 14.09.1938 ஆம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.2245/1938, 05.09.1946 ஆம் தேதியிட்ட ஆவண

எண்.1888/1946 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்கு தேவையற்ற ஆவணங்கள் என்றும், 22.08.2014 ஆம் தேதியிட்ட பட்டா எண்.1844 ல் சர்வே எண்.829/11 –க்கு வீரப்ப செட்டியார் பெயரில் வழங்கப்பட்டது என்றும் வீரப்ப செட்டியார் இறந்து விட்டார் என்றும், அவருக்கும் வாதிகளுக்கும் எவ்வித பிரச்சனை இல்லை என்றும், ஆவண எண்.4 ஏற்கனவே வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டது என்றும், ஆவண எண்.5 மற்றும் 6 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் வழக்கை தாமதிக்கும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

5.3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் சர்வே எண்.829/10 மற்றும் A, B, C, F, G பகுதி எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பொதுப்பாதையா ? மற்றும் மேற்படி சொத்தின் அனுபவம் மனுதாரர் கூறுவது போல் அவர் வசம் உள்ளதா ? அல்லது எதிர்மனுதாரர் வசம் உள்ளதா ? என்பதை உரிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் முடிவு செய்வதே நீதியின்பால் சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்களா? என்பதை வழக்கு விசாரணையின் போது முடிவு செய்வதே நீதியின் பால் உகந்ததாக இருக்கும், மற்றும் உரிய காலத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்பதாலேயே அவற்றை ஏற்க மறுப்பது நீதியின்பால் உகந்ததாக இருக்காது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை சாட்சியத்தில் அனுமதித்து,

எதிர்மனுதாரருக்கும் அவர் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்க வாய்ப்பு வழங்கி அசல் வழக்கை தீர்வு காண்பதே சட்டப்படி சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

i) மனுதாரர் மனு செலவு தொகையாக ரூ.500/-ம் வருகிற 09.04.2025 ஆம் தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டும்.

ii) மனுதாரர் தரப்பு சாட்சியத்தை எவ்வித கால தாமதமும் இன்றி முன்னிலைப்படுத்தி விசாரணையை விரைந்து முடிக்க வேண்டும்.

iii) மனுதாரர் செலவுத் தொகையை செலுத்தாவிட்டால் மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றவாணங்கள்:- இல்லை.**

ஒம்/- S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.